TNTP120000332025

Presented on : 03-03-2025
Registered on : 03-03-2025
Decided on : 11-06-2026
Duration : 1 years, 3 months, 8 days

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், துறையூர்
முன்னிலை. திரு தி.அன்பு, பி.ஏ., பி.எல்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி
2026 ம் ஆண்டு ஜுன் திங்கள் 11 ம் நாள் வியாழக்கிழமை

**அசல் வழக்கு எண்.27/2025**

T.துரைராஜ் .. வாதி

/எதிர்/

1. N.சரவணன்
2. S.அபர்ணா
3. வட்டாட்சியர், துறையூர்
4. தமிழக அரசு அதன் சார்பாக
   மாவட்ட ஆட்சியர், திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

.. பிரதிவாதிகள்

இவ்வழக்கானது, என்முன்பாக 06.03.2026 ம் தேதியில் இறுதி விசாரணைக்காக வந்தபோது வாதிக்காக கற்றறிந்த வழக்கறிஞர் திரு. டி.கார்த்திகேயன் அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதிகளை அழைத்தும் ஆஜரில்லாமல் தோன்றாத்தரப்பினராக்கப்பட்டும், வாதி தரப்பு சாட்சியம் மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள்வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

**தீர்ப்புரை**

வாதிக்கு பாத்தியப்பட்ட தாவாச்சொத்தில் 1,2 பிரதிவாதிகள் இடையூறு செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கக்கோரி இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

T Anbu

Digitally signed by T Anbu
Date: 2026.06.11 18:01:14 +0530

2. <u>வாதி தாக்கல் செய்துள்ள வழக்குரையின் சுருக்கம்</u>

வழக்கிடை சொத்து புத்தனாம்பட்டி கிராமத்தில் புதிய நத்தம் சர்வே எண்.690/17 ல் 0.00.86 சதுர மீட்டர் ஆகும். அதனை ஒட்டி வாதிக்கு சர்வே எண்.690/15 ல் 0.00.76 சதுர மீட்டரில் குடியிருப்பு வீட்டுமனை உள்ளது. சர்வே எண்.690/17 என்பது காலி மனையாகும். இதன் பழைய சர்வே எண்.690/1 பா ஆகும். இரண்டு மனைகளும் வாதிக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்டதாகும். அதன் அடிப்படையில் வழக்கு சொத்தான சர்வே எண்.690/17 ல் 0.00.86 சதுரமீட்டர் காலிமனையை பொறுத்து துறையூர் வட்டாட்சியரான 3 ம் பிரதிவாதியால் 2023 ம் வருடத்தில் மனைவாரி தோராயப்பட்டா வழங்கப்பட்டுள்ளது. மேற்படி காலிமனையில் வாதியே தன் குடும்பத்துடன் சர்வ சுதந்திரமாக அனுபவித்து வருகிறார். வழக்கு சொத்தில் வாதியை தவிர வேறு எவருக்கும் உரிமையும், பாத்தியமும் கிடையாது.

3. பிரதிவாதிகள் புத்தனாம்பட்டி கிராமத்தை சேர்ந்தவர்கள். அவர்கள் தொழில் சம்மந்தமாக துறையூர் நகரில் வசித்துக்கொண்டு வழக்கிடை சொத்தான காலிமனையை கடந்த 6 மாதங்களுக்கு முன்பாக வாதியிடம் கிரையத்திற்கு கேட்டனர். அதற்கு மறுத்துவிடவே மனஸ்தாபம் கொண்ட 1,2 பிரதிவாதிகள் தங்களது அரசியல் செல்வாக்கினால் வாதி பெயரில் உள்ள வழக்கிடை சொத்திற்கான பட்டாவினை 3 ம் பிரதிவாதி உடந்தையின் பெயரில் மாற்றம் செய்வதற்கு ஆக்கப்பூர்வமான பணிகளை மேற்கொண்டு வருகிறார். அவ்வாறு வழக்கிடை சொத்தைப் பொறுத்து வாதி பெயரில் ஏற்பட்டுள்ள பட்டாவினை வருவாய்த்துறை மூலம் 1,2 பிரதிவாதிகள் ரத்து செய்துவிட்டால் வாதிக்கு அளவிட இயலாத வீண்சிரமங்கள் ஏற்பட்டுவிடும். வாதியின் அமைதியான அனுபவத்தில் இருந்துவரும் வழக்கிடை சொத்தில் 1,2 பிரதிவாதிகள் கடந்த 20.02.2025 ம் தேதி முதல் சட்டத்திற்கு புறம்பாக ஆக்கிரமிப்பு செய்ய முயற்சித்து வருகிறார்கள். 1,2 பிரதிவாதிகள் தங்களது அரசியல் செல்வாக்கினால் 3 ம் பிரதிவாதியின் மூலம் வாதியின் பெயரில் உள்ள பட்டாவினை மாற்றம் செய்யபோவதாக கூறி வருவதால் வருவாய்த்துறையினரையும் வழக்கில் தரப்பாளராக சேர்க்கப்பட்டுள்ளார்கள். 1,2 பிரதிவாதிகள் ஆள்பலமும், பணபலமும் உள்ளவர்கள். எந்த நேரத்திலும் வழக்கிடை சொத்தில் வாதியின் அனுபவத்திற்கு இடையூறு செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

T Anbu
Digitally signed by T Anbu
Date: 2026.06.11 18:01:26 +0530

4. 1,2 பிரதிவாதிகள் நீதிமன்ற அழைப்பாணையினை பெற்றுக்கொண்டும் அழைத்தும் ஆஜராகாததால் கடந்த 02.04.2025 ம் தேதி தோன்றாத்தரப்பினராக்கப்பட்டார்கள். 3,4 பிரதிவாதிகள் 28.04.2025 ம் தேதியிலிருந்து எதிர்வழக்குரை தாக்கல் செய்யாததால் கடந்த 15.12.2025 ம் தேதி தோன்றாத்தரப்பினராக்கப்பட்டுள்ளார்கள்.

5. இவ்வழக்கு அனுமதிக்கத்தக்கதா? வாதி கோரிய பரிகாரங்கள் வாதிக்கு கிடைக்கத்தக்கதா? என்பதே தீர்வுக்குரிய பிரச்சினையாகும்.

6. வாதியின் தரப்பில் வாதி துரைராஜ் வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, வா.சா.ஆ.1 முதல் 4 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. பிரதிவாதிகள் வழக்கில் தோன்றாத்தரப்பினராக உள்ளார்கள். பிரதிவாதிகள் தரப்பில் சாட்சியமோ சான்றாவணங்களோ இல்லை.

7. வாதியின் தரப்பில் ஆஜரான வழக்கறிஞர் எழுத்துமூல வாதுரை தாக்கல் செய்து வாதிட்டார். வழக்கு சொத்து பூர்வீகமாக பாத்தியப்பட்டது எனவும், அதனை நிரூபணம் செய்ய 27.07.2023 ம் தேதியிட்ட வாதிக்கு வழங்கப்பட்ட மனைவரி தோராயப்பட்டா மற்றும் கிராம நிர்வாக அலுவலரால் வழங்கப்பட்ட அடங்கல் பதிவேடு நில உரிமை மற்றும் நான்கெல்லை சான்று தாக்கல் செய்துள்ளதாகவும், வழக்கிடை சொத்தினை வாதியே குடியிருந்துகொண்டு அனுபவித்து வருகிறார் எனவும், வாதியை தவிர மற்ற எவருக்கும் எவ்வித உரிமையும் இல்லை எனவும், இந்நிலையில் 1,2 பிரதிவாதிகள் வழக்கிடை சொத்தினை வழக்கு தாக்கல் செய்வதற்கு ஆறு மாத காலத்திற்கு முன்பாக கிரையத்திற்கு கேட்டு, வாதி கொடுக்க மறுத்துவிட்டதால் மனஸ்தாபம் கொண்ட 1,2 பிரதிவாதிகள் 3 ம் பிரதிவாதியின் உடந்தையின் பேரில் வாதி பெயரில் உள்ள பட்டாவினை 1,2 பிரதிவாதிகள் பெயருக்கு பட்டா மாற்றம் செய்துகொள்ள சட்டத்திற்கு புறம்பான செயல்களை மேற்கொண்டதாகவும், 1,2 பிரதிவாதிகள் நீதிமன்ற அழைப்பாணையினை பெற்றுக்கொண்டும் ஆஜராகாமல் தோன்றாத்தரப்பினராக்கப்ப்டுள்ள நிலையிலும், 3,4 பிரதிவாதிகளான அரசு தரப்பினர்களுக்கு அரசு வழக்கறிஞர் ஆஜராகி எதிர்வழக்குரை தாக்கல் செய்யாதால், தோன்றாத்தரப்பினராக்கப்பட்டுள்ளதாகவும், வாதிக்கு வழக்கிடை சொத்து வாதிக்கு ஏகதேசத்தில் பூர்வீகமாக

T Anbu
Digitally signed by T Anbu
Date: 2026.06.11 18:01:36 +0530

பாத்தியப்பட்டது என்பதால், தாவாப்படி தீர்ப்பாகவேண்டும் எனவும் வாதிட்டார்.

8. தாவாச்சொத்து சர்வே எண்.690/17–0.00.86 சதுர மீட்டர் காலிமனை வாதிக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்டது என்றும், இதனை அனுசரித்து 3ம் பிரதிவாதி வா.சா.ஆ.1 தோராய மனைவரிப்பட்டா மற்றும் வா.சா.ஆ.2 துாய அடங்கல் பதிவேடு என இரு உடமை ஆவணங்களும் வாதிக்கு வழங்கப்பட்டதாகவும், அதன் அடிப்படையில் வாதி தற்போது வரை சுவாதீனத்தில் இருந்து வருவதாகவும், தாவா கிராம நிர்வாக அலுவலர் வழங்கிய நான்கெல்லை சான்று வா.சா.ஆ.3 வாதுரையில் சொல்லப்பட்ட தாவாச்சொத்தின் நான்கெல்லையுடன் ஒத்து செல்கிறது. இந்நிலையில் தாவாச்சொத்தில் வாதி அமைதியாக அனுபவம் செய்து வருவதாக வாதி தன்னை வா.சா.1 ஆக விசாரித்து வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.3 ஆவணங்கள் குறியீடு செய்துள்ளார்.

9. இந்த சாட்சியத்தினை மறுத்தளிக்கவேண்டிய பிரதிவாதிகள் தோன்றாத்தரப்பினராக்கப்பட்டுள்ளார்கள். வாதி முன்னிலைப்படுத்திய சாட்சியம், சான்றாவணங்களுக்கு முரணான சாட்சியம் வழக்கில் காணப்படவில்லை. இவ்வழக்கில் 3,4 பிரதிவாதிகள் அரசு தரப்பினர்களாக இருந்தபோதிலும் எதிர்வழக்குரை தாக்கல் செய்யவில்லை. மேலும் 1,2 பிரதிவாதிகள் அழைப்பாணையினை பெற்றுக்கொண்டு நீதிமன்றத்தில் ஆஜராகி வாதிக்கு எதிரான சாட்சியம் முன்னிலைப்படுத்தப்படவில்லை.

10. இவ்வழக்கானது வாதி தனக்கு பாத்தியப்பட்ட தாவாச்சொத்தில் 1,2 பிரதிவாதிகள் இடையூறு செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கக்கோரி தாக்கல் செய்துள்ளார். தனக்கு பாத்தியப்பட்டது என்பதற்கான உரிமை ஆவணம் எதுவும் வாதி தாக்கல் செய்யவில்லை. ஆனால் உடமை ஆவணங்களான வா.சா.ஆ.1, மற்றும் வா.சா.ஆ.2 ஆன பட்டா வாதியின் பெயரில் காணப்படுகிறது. 1983ம் ஆண்டு தமிழ்நாடு பட்டா பாஸ்புத்தக சட்டம் பிரிவு 4ன் கீழ் இந்த இரு ஆவணங்களிலும் குறிப்பிடப்பட்டுள்ள சங்கதிகள் சரியானது என அனுமானம் கொண்டும், அனுபவத்தினை ஒட்டியே உரிமை மூலத்தினை பார்க்கவேண்டியுள்ளதாலும், தாவாச்சொத்தில் வாதி அனுபவத்தில் உள்ளார் என முடிவுக்கு வரவேண்டியுள்ளது. மேலும் வா.சா.ஆ.3 கிராம நிர்வாக அலுவலர் சான்றிதழில் வாதியின் பெயரை

T Anbu

Digitally signed by T Anbu
Date: 2026.06.11 18:01:46 +0530

குறிப்பிட்டு தாவாச்சொத்திற்கான நான்கெல்லை சான்று வழங்கியுள்ளது வாதியின் வழக்கை உறுதியூட்டுவதாக அமைந்துள்ளது.

11. வா.சா.1 தனது முதல் விசாரணை வாக்குமூலத்தில் கடந்த 6 மாதங்களுக்கு முன்பாக 1,2 பிரதிவாதிகள் வழக்கு சொத்தை கிரையம் கேட்டார்கள். மறுக்கவே 2,3 பிரதிவாதிகளை அணுகி வழக்கு சொத்திற்கான பட்டாவை மாற்றம் செய்ய முயற்சி செய்து வருகிறார்கள். தாவாச்சொத்திற்கான வா.சா.ஆ.1, 2 ஆவணங்களான பட்டா வாதியின் பெயரில் உள்ளதாலும், பிரதிவாதிகள் அவ்வாறு முயற்சி செய்து வருவதாக அச்சுறுத்தல் இருப்பதாலும், தாவாச்சொத்தை எவ்வித அச்சுறுத்தலும் இன்றி அனுபவம் செய்ய வாதிக்கு உரிமையுள்ளது என்பதாலும், தாவாச்சொத்தில் வாதி அமைதியான அனுபவத்தில் உள்ளார் என்பதாலும், வாதியின் சாட்சியத்தினை நம்பவேண்டாம் என்பதற்கு பிரதிவாதிகள் தரப்பில் சாட்சியங்கள் முன்னிலைப்படுத்தப்படவில்லை. தோன்றாத்தரப்பினராக உள்ளார்கள். எனவே, வாதி வழக்கு சூழ்நிலையின் அடிப்படையில் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் பெற அருகர் என இந்த பிரச்சினைக்கு வாதிக்கு ஆதரவாக தீர்வு காணப்படுகிறது.

இறுதியாக வாதியின் வழக்கு அனுமதிக்கப்படுகிறது. வாதிக்கு பாத்தியப்பட்ட தாவாச்சொத்தில் 1,2 பிரதிவாதிகள் இடையூறு செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிக்கு வழங்கி இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கின்றது. செலவுத்தொகை இல்லை.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தாளருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் படித்துப்பார்த்து பிழைநீக்கம் செய்யப்பட்டு 2026ம் ஆண்டு ஜூன் திங்கள் 11ம் நாளான இன்று இந்நீதிமன்றத்தின் முன் அவையறிய பகரப்பட்டது.

T Anbu

Digitally signed by T Anbu
Date: 2026.06.11 18:01:56 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
துறையூர்.

**வாதி தரப்பு சாட்சிகள்**

வா.சா.1 துரைராஜ்

**வாதி தரப்பு சான்றாவணங்கள்**

| ஆவண எண். | தேதி | ஆவணம் | ஆவணத்தின் தன்மை |
|---|---|---|---|
| வா.சா.ஆ.1 | 27.04.2023 | வாதி பெயரில் உள்ள பட்டா | அசல் |
| வா.சா.ஆ.2 | – | வாதி பெயரில் உள்ள அடங்கல் பதிவேடு | அசல் |
| வா.சா.ஆ.3 | – | புத்தனாம்பட்டி கிராம நிர்வாக அலுவலரின் நில உரிமை மற்றும் நான்கெல்லைசான்று | அசல் |
| வா.சா.ஆ.4 | – | வாதியின் ஆதார்அடையாள அட்டை (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது) | நகல் |

**பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள் சான்றாவணங்கள்**

இல்லை

T Anbu

Digitally signed by T Anbu
Date: 2026.06.11 18:02:08 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
துறையூர்.

Visit **ecourts.gov.in** for updates or download mobile app “**eCourts Services**” from Android or iOS